# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:68** **தேதி:27.09.2015**

# தற்காலிக PLI வழங்கக் கோரி அக்டோபர் 6ல் ஆர்ப்பாட்டம்- FORUM முடிவு

அன்பார்ந்த தோழர்களே,

**24.09.2015 அன்று நடைபெற்ற FORUM கூட்டத்தில் தற்காலிக PLIஐ உடனே வழங்கக் கோரி 06.10.2015 அன்று நாடு தழுவிய அளவில் சக்தியான ஆர்ப்பாட்டம் நடத்த அறைகூவல் விடப்பட்டுள்ளது.** நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதை காரணம் காட்டி கடந்த சில வருடங்களாக நிர்வாகம் PLI வழங்க மறுத்து வந்தது. ஆனால் ஒரு நிறுவனத்தின் லாபத்துடன் PLI வழங்குவதை இணைக்கக் கூடாது என DPEயின் வழிகாட்டுதல் உள்ளது. நிர்வாகத்திற்கு அந்தக் கடிதத்தின் நகலையும் நாம் கொடுத்துள்ளோம். புதிய PLI பார்முலா உருவாக்க அமைக்கப்பட்ட கமிட்டி, தொடர்ச்சியாக கூடாத காரணத்தால் இது வரை முடிவு எடுக்கவில்லை. இந்தக் கமிட்டி புதிய பார்முலா உருவாக்க இன்னமும் சில மாத காலம் ஆகலாம். அது நிர்வாகக் குழு மற்றும் இயக்குனர் குழுவின் ஒப்புதலை பெற மேலும் சில மாதம் ஆகும். எனவே தற்காலிக PLIஐ உடனே வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என FORUM முடிவு செய்துள்ளது. நிர்வாகம் பொருத்தமான முடிவு எடுக்கவில்லை என்றால் போராட்டத்தை தீவிரப்படுத்த அடுத்து 12.10.2015 அன்று நடைபெறும் FORUM கூட்டம் முடிவு செய்யும். எனவே FORUMத்தில் உள்ள அனைத்து சங்கங்களையும் ஒன்று திரட்டி 06.10.2015 அன்று சக்தியான ஆர்ப்பாட்டங்களை நடத்த மாவட்ட சங்கங்கள் தயாரிப்பு பணிகளை உடனடியாக துவங்க வேண்டும்.

**IDBI வங்கியை தனியார் மயமாக்குகிறது மோடி அரசாங்கம்:-** IDBI வங்கியை தனியார் மயமாக்கும் முன்மொழிவை மோடி அரசாங்கத்தின் நிதி அமைச்சகம் இறுதி செய்ய உள்ளது. தற்போது IDBI வங்கியில் அரசின் முதலீடு 76.5% உள்ளது. அதனை 49%ஆக குறைக்க அரசு முடிவெடுத்துள்ளது. இது அந்த வங்கியை தனியார்மயமாக்குவதே ஆகும். இந்த நடவடிக்கைக்கு மோடி அரசாங்கம் என்ன விளக்கம் அளிக்கப்போகிறது? இந்திய பொருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு வங்கிகளுக்கு இந்திய வங்கி துறையை கொள்ளையடிக்க திறந்து வைக்கும் மோடி அரசின் முயற்சியின் ஒரு மிகப்பெரிய நடவடிக்கையாக இது கருதப்படுகிறது.

**தோழர் M.L.தார் மறைந்தார்:-** ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் மூத்த தொலை தொடர்பு தொழிற்சங்க தலைவர் தோழர் M.L.தார் 24.09.2015 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஒன்று பட்ட NFTE சங்கத்தில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் AITEU Cl.III மற்றும் AITEU LS & Gr.D சங்கங்களின் மாநில செயலாளராகவும், சம்மேளனக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டவர். ஜம்மு காஷ்மீர் மாநில தலைமை பொது மேலாளர் அலுவலக மாவட்ட செயலாளராகவும் பணியாற்றியிருந்தார். அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

**மெக்கா கூட்ட நெரிசலில் 749 பேர் மரணம்:-** இந்த ஆண்டு மெக்கா புனித யாத்திரையின் போது மிகப்பெரிய சோகம் ஏற்பட்டுள்ளது. அந்த கூட்ட நெரிசலில் சிக்கி 749 பேர் மரணம் அடைந்துள்ளனர். ஆயிரக்கணகானோர் காயமுற்றுள்ளனர். அதில் மூன்று தமிழர்கள் உள்ளிட்ட 14 இந்தியர்களும் மரணமடைந்துள்ளனர். மெக்காவில் இந்த ஒரு மாதத்தில் நடைபெற்ற இரண்டாவது சோகமாகும். மெக்காவில் இறந்த அந்த மக்களுக்கும் நமது அஞ்சலியையும், அவர்களது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

**துணை டவர் நிறுவனம்:-** துணை டவர் நிறுவனம் அமைக்கப்படுவது தொடர்பாக 24.09.2015 அன்று நடைபெற்ற FORUM கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும் ஏப்ரல், 2015 இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகள் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. மேலும் BBNL நிறுவனத்தை BHARAT NET என மாற்றப்பட்டது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. விவாதங்கள் முற்றுப் பெறாததால் 12.10.2015 அன்று நடைபெற உள்ள அடுத்தக் கூட்டத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முடிவு செய்யப்படும்.

**அனாமலி:-** 23.09.2015 அன்று நமது சங்கத்தின் சார்பில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS., மற்றும் தோழர் M.C.பாலகிருஷ்ணா AGS ஆகியோரும், நிர்வாக தரப்பில் திருமிகு மது அரோரா GM(Estt) திரு சிவ சங்கர் பிரசாத் DGM(Estt) ஆகியோரும் பங்கேற்ற ஒரு விவாதம் நடைபெற்றது. பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளிட்ட ஒரு விரிவான அறிக்கையினை நமது சங்கத்தின் சார்பாக கொடுக்கப்பட்டது. அத்துடன் மீண்டும் DOTக்கு அனுப்பாமல் நிர்வாகமே உத்தரவு வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. நமது கருத்துக்களை ஏற்றுக் கொண்ட GM(Estt) அவர்கள், மாநில அலுவலகங்களில் இருந்து விவரங்கள் வராமல் கார்ப்பரேட் அலுவலகம் எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாது என்று தெரிவித்தார். மாநில அலுவலகங்களில் இருந்து அறிக்கையினை பெற DIRECTOR(HR) அவர்களின் தலையீட்டை கேட்பதாகவும் அவர் கூறி உள்ளார். ஊழியர்கள் பல ஆண்டு காலமாக சிரமப்படுவதால் உடனடியாக உத்தரவு வெளியிட வேண்டும் என நமது சங்க தலைவர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர்.

**விடுபட்ட ஊழியர்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை:-** 01.01.2007 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பணியமர்த்தப்பட்ட Sr.TOA, RM உள்ளிட்ட விடுபட்ட தோழர்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்கு நமது மத்திய சங்க தலைவர்கள் GM(Estt) அவர்களிடம் தங்களின் அதிருப்தியை தெரிவித்தனர். TTAக்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகையினை பரிந்துரைத்த அதே குழுவிற்கு இந்த பிரச்சனையை பரிந்துரைக்க நிர்வாகம் முடிவு எடுத்துள்ளது என GM(Estt) அவர்கள் தெரிவித்தார். இதனை விரைவில் முடிக்க வேண்டும் என நமது சங்க தலைவர்கள் வற்புறுத்தி உள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**